order has failed in this State. I hear murders not being detected. I warn the Government that the recent poll results have indicated the adverse trend of the Government. A proper course for the Government is to order for fresh poll and not to carry on in the Government with the past glory. Thank you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–27 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

54. கலவை அங்காடியின் முகவரியினை மாற்றுவது குறித்து வேளாண்மைத் துறையின் 17—12—1979 ஆம் தேதியிடப் பெற்ற 110747/AMII 79-2 ஆம் எண் அரசு கடிதத்தில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23 1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

55. நெல், பருத்தி, வேர்க்கடலை, மிளகாய் ஆகியவற்றைப் பொருத்த மட்டில் மேலூர் அங்காடியினை அறிவிக்கப் பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 2—11—1979-ஆம் தேதியிடப்பெற்ற 2025-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு(தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959 29 (4)ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

56. வருவாய்த் துறையில் 9—12—1971ஆம் தேதியன்று வெளியாகி 15—3—1972ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டின் பாகம் III-ல் (ஆங்கிலத்தில்) 372ஆம் பக்கத்தில் வெளியான III–162/1972ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்–சமய அறக் கட்டளைகள் துறையின் 3—12—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1775 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)